# கடற்கரை கவியரங்கு– 642

**நாள்: 06-10-2024**

# இயன்நிலை அறிவோம்!

தேடியதும் நமது இல்லை! தேடுவதும் நமது இல்லை!
கூடியதும் நமது இல்லை! கூடுவதும் நமது இல்லை!
வாடுவதால் பயனில்லை! வருந்துவதால் பயனில்லை!
தேடுவதால் வாடுவதும், வாடுவதால் வருந்துவதும்,

நாடுகின்ற வாழ்க்கை நாளும் தரும் தொல்லை!
கூடுநிறை தேன்துளிகள் கொள்ளையாதல் இயலே!
பாடுகின்ற தேனீக்கள் பயன்தேடி வருந்திடுமோ?
ஆடுகின்ற கிளைவழியே ஆர்ப்பரிக்கும் குரங்குகளும்,

ஓடி விளையாட எந்தப் பறவையினம் பயங்கொள்ளும்?
விடிகின்ற வேளையிலே வெள்ளனவாய் குரலெழுப்பும்!
துடிப்பின்றி இளங்காலை தன் பணியைத் தான் தொடர,
மடிதுஞ்சி விளையாடும் கன்றுகளும் தாய்மடியில்!

கொடிவழியே சலசலக்கும் காற்றின்வழி கதிரெழவும்,
மடியோடு ஆடுகள்தாம் தலைநிமிர்த்தும் காலையது!
கூடுகின்ற உயிர்யாவும் கொள்கையின்றி இயலாக,
பாடுபடும் மானுடம்தான் தன்மனத்தைத் தான்நோவும்!

வாடுவதால் ஓடுவதால் மாறிவிட எதுதான் உண்டு?
நாடுகின்ற வாழ்க்கையிதை நாமேற்றுக் கொண்டால்,
கூடிவிடும் துன்பம் ஏது? கொப்பளிக்கும் துயர்தான் ஏது?
வாடுவதும் வருந்துவதும் வாய்ப்புகளைத் தகர்த்துவிடும்!

தேடுவதே வாழ்க்கையதின் திண்மையான ஒரு பயணம்!
தேடுவதில் மனம் தெளிவோம் தொல்லையின்றி வாழ்வதற்கு!
கூடுவதைக் நாடிடுவோம்! குறையில்லா மனம் கொள்வோம்!
நாடியே மூலப் பரம்பொருளை நாமுணர்ந்தால் நிலை தெளியும்!

**- கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**

**05-10-2024 (இரவு 11-25)**